SUPPLEMENT TO THE BRAHMAVIDYA.

ப்ரம்மவித்தியா

அநுபந்தம்.

௰௧-ம்புத்] சிதம்பரம். ஏவிளம்பி௵ ஆனி௴ ௨௰௧௳ 1897௵ ஜூன்௴ 14௳ [இல-௨.

வைதிக சந்திரமௌலி.

மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

ஆகையால் கேவலம் பஸ்மருத்திராக்ஷசிவலிங்கபஞ்சாக்ஷரீவில்வங்களாகிய பஞ்சலிங்கங்களேசிவாத்துவிதிகளான வைதிகசிகாமணிகளுக்கு ஆசாரியனால் அனுக்கிரகிக்கப்படவேண்டியதேயன்றி மற்று அவைதிகாகமோக்த ஹௌத்ரியாதி தீக்ஷையுள்ளவருக்கனுவசியம். அதனாற்றான் ஸ்ரீமதாசாரியர் ஹரதத்தர் உபநயனமேவைதிகருக்குஅத்வசுத்திரூபம் என்று "ஸுவ்யா நவ்யவதிம்" என்றசுலோகத்தில் குறித்தார். மகாவ்யாகிருதியால் கர்ப்பாதானம் செய்யப்பட்டு ஏழாம்வயதிலேயே ஆசிரியர் திருவாக்கின்படி பாமபாவனாத்துவசுத்திபெற்ற பிராம்மணாதிகளுக்கு உபநயனத்தால்கிடைக்காத ஓர் அதிகாரம் இவ்வாகமங்களால் கிடைக்கும் என எந்தவைதிகனும்சொல்ல! முன்வரான். மேலும் மூவருணத்தவருக்குச் சிறப்பாய் வைதிகம் ஏற்பட்டிருக்க அதைவிட்டு அவைதிகருக்கும் வைதிகருக்கும் பொதுவான சாமான்ய ஆகமத்தைத் தழுவவேண்டியதாவது இத்துடன் அதை கலக்கவேண்டுவதாவது முற்றிலும் அனுசிதமாம். மேலும் சிவப்புரோக்தாகமங்கள் பலவிருப்பதால் காமிகாதிளே முக்கியம் மென்பது சம்சயமே. ஆகையால்இவர்காட டியவசனங்கள்இவர்க்கியாதும் சாதகமின்றி ஒழிந்தன. மேலே இவ்வுண்மையறிந்த உமாபதி சிவத்தைக்கொண்டாடினதும் இவருக்குள்ள ஆசாரிய பக்தியின் முதிற்சியேயாதலால் அது ஒருவாறுபொருந்தும். ஆயினுமது பிரகிருதத்தில் உபயோகமாகாது. மேலும் கிருஷ்ணனுக்கு உபமன்யுசெய்ததீக்ஷை சாம்பவிஎன்றார். முன்னர் இதைச் சிவபுராணம் சிலாகித்ததென்றார். அன்றி வைதிகவிரஜாதீக்ஷையென்றார். இவ்விதம் ஒன்றுக்கொன்று சம்பந்தமேயில்லை. அத்தியாச்சிரமமாதி சொற்கள் வைதிகபஸ்மதாரணத்திறகே பெயர்கள்என்று காட்டினோம். மேலும் வாயுசங்கிதை உத்தரபாகம் இரண்டாவது அத்தியாயமுதல் வைதிக சிவாகமங்களின் பெருமை ஆரம்பிக்கப்பட்டு பதினொன்று அத்தியாயங்களால் முழக்கப்பட்டது. முற்பகுதியிலும் ஐந்து அத்தியாயங்கள் அதன்பெருமையை விளக்கியன. உத்தரபாகம் பதிமூன்றும் அத்தியாயந்துவக்கி 29-வரையுள்ள பதினேழில் 25-தவிர மற்றையபதினாறும் அவைதிகாகமப்பிரஸ்தாரம். ஆக 32-ம்போக வேதவேதாந்தப் பிரசம்ஸை 28-ம்சேர்ந்து அறுபது அத்தியாயமாகின்றது. இவற்றுள்ளும் வைதிகாகமத்தைக் குறித்ததும் வைதிகமகிமையேயாதலால் 16. அவைதிகாகமசம்பந்தமும் 44. வைதிகமும் என்றேற்படும். அவைதிகாகமங்களைப்பற்றிக் கேட்ட கிருஷ்ணனுக்கு உபதேசிக்கவெழுந்த உபமன்யு வசனம் முதலில்:—

தஸ்யாஸ்து ஸம்ஸ்காரவைஹீக்ஷே த்ரிவிதகய்யதே।
ஶாம்பவீ சைவஶாக்தீ ச மாந்த்ரீ சைவஶிவாகமே॥

அதனால் சம்ஸ்காரமே தீக்ஷையென்று சொல்லப்பட்டது. அதுவே "சாம்பவீ, சாக்தி, மாந்திரீ" எனச்சிவாகமத்தில் மூவ்வகையாக வருக்கப்பட்டதென்று கூறி, மேலே அதன்பேதங்கள் "தீவ்ரை" முதலியன சொல்லப்படுவதால் "சாம்பவீ" என்றது அவைதிக சிவாகமோக்த சம்ஸ்காரமே. அது ஈதல்ல. ஆகையால் அதுதவறு. பிறகு மூலவிருத்த மொழிபெயர்ப்பை யாம் சிறிதுங் கவனிக்கவேண்டியதில்லை என உமாபதிசிவத்தின்வாக்கை விளக்கினோம். திருமூலர் திருவாக்கே அவ்வாகமத்திற்கே மொழிபெயர்ப்பாதலால் அதுவும் ஆகமங்களடைந்தகதியே அடையும். அவைதிக ஆகமோக்த சாக்ததீக்ஷை சூதசங்கிதையில் உண்டெனக்காட்டவெழுந்த கோலத்தைச் சிறிது விசாரிப்பாம்:— இடை இடையே தலையுங்காலுமாக ஏதேதோ எழுதப்பட்டது. அது சற்றும் நமக்குப் பாதகமேயில்லை. மற்றவிடம் இவர் எழுதியதற்கோர் தலையும் காலும் இல்லாமற்போனபோதிலும் இங்கமைந்த தலையுங்காலும் ஒப்பத்தக்கதே. கிற்க சாக்திதீக்ஷை சூதசங்கிதையிற் குறிக்கப்பட்டவசனமீதாம்:—

தஸ்யஶிஷ்யஸ்ய விப்ரேந்த்ராः கடாக்ஷாதேவ கேவலாத்॥
ஶாம்பவீஶக்திருத்பந்நா தத்த்வஜ்ஞாநப்ரதாயிநீ॥

"அச்சீடனுக்கு இருவினையொப்பு எய்தியவிடத்து அவனறிவிலே அருட்சிவசக்தி (சாம்பவசக்தி) பதிகின்றது" என்று கூறிற்று என்பதாம். இது யக்ஞவைபகண்டம் 34வது அத்தியாயத்துள்ளது. ஆனால் இது அவைதிக சிவாகமத்துள்ள சாக்ததீக்ஷை சொன்னதல்லவே. என்னையெனில்:—இதற்கடுத்த செய்யுளில்:—

ததாஶிஷ்யஸ்ய விப்ரேந்த்ரா ஸைவ ஶக்தி ததாஶோஹாஸவிநீ।
மாயாதீம் பாஹவேத்ஸம் விஸ்த்தாவத திவிப்ரஹா॥

ஶிஷ்யஸ்யதேஹவிஶ்லேஷா: யாணுமவக்தே ஸதி ! க்ஷதாய-ேவணவிஶ்லேஷா நயஶஹயொஹி ஜாயதெ॥ தஸ்யப்ரஸாதயுக்தஸ்ய விழ்யாவெஷாஙவாக்யஜா|ஷஹக்ய விழ்யாவியாம் தவெஸயெ-ஸ்ரஷயெயயா॥ஐகிதயா| ஶக்திவாதநவஸம்யுக்தா விழ்யாவெஷாஙவாக்யஜா॥

அப்பொழுதுசிடனுக்குச்சித்ரூபனுகியசொரூபத்தில் கற்பிதமான (பிரம மயக்கம்) ரூபமானமாயை யொழியும். ஒழிந்தபோழுது தேகம்விழும். அதுவிழுந்தால் அவன் கிருதார்தன். அவனுக்கும் மீட்சியில்லை. அவ்விதப் பிரசாதம் பெற்றவனுக்கு வேதாந்தவித்தையுண்டாய் சூரியன் இருளைத்துலைப்பதுபோல அவித்தையெல்லாம் துலைக்கும் என்றும் சக்திபாதம் உள்ளவருக்கு வேதாந்தவித்தையுண்டாம் என்றும் சொல்லப்படுதலாலும், அடுத்த அத்தியாயத்தில் சிவாத்துவிதாசாரியர்களைச் சொல்லுமிடம் ஆகமசம்பிரதாய சந்தானத்தைவிட்டு ஸ்ரீ பரமேசுவரன் ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீ சனற்குமாரர் ஸ்ரீ வேதவ்யாஸர் எனக்குறித்தலாலும் இறுதியில் சூதகீதை எட்டாம் அத்தியாயத்தில்—

ஜாயதெஶக்திவாதெந வாக்யாதெவாயிகாரிணாம்|

"சக்திபாதம் பெற்றவர்க்கும் வேதாந்தவாக்கியத்தாற்றான் ஞானம் உண்டாம்" என்றும் குறிக்கப்படுதலால் என்க. இதனால் சக்திநிபாதப்பெருமையை விரித்த வேதாந்தங்களாகிய முண்டகாதிகளையும்மற்றுமுள்ளபுராணங்களையும், அவை நிகாகமத்துள்ள "சாக்தி" என்ற கிரியாபதிதீக்ஷாபரமாகிய இவர்சூது வெளிப்படுத்தி அதனுரிமைகொண்டாடியது அவலமாயிற்று. இங்கு சத்திநிபாதம் சொல்லப்பட்டால் அது சாக்தீதிக்ஷையைக்குறித்ததென்ற வாக்கியார்த்த சம்பிரதாயம் மிகவும் சிலாகிக்கத்தக்கதே! ஒரு வைணவன் தர்க்கம் படித்தானும்; அதில் மயக்கவறிவுக்கு உதாரணமாக "ஐஜெரஜதெ" "இவை ஈயமும் வெள்ளியும்" என்றபொருளில் ஒருவாக்கியமுண்டு. அதைக்கேட்டவுடனே அவ் வைணவன் எழுந்து புஸ்தகத்தையும் குருவையும் வலம்வந்து ஆநந்தமாய்ப்பணிந்து புரண்டெழுந்து திருவரங்கநாதரே இங்குநின்று சேர்வையருளினையன்றே! இது நாயேன் மீதுள்ள கருணையன்றோ?" என்றனும். அதுபோல இவருக்குச் சொல்மட்டும் அகப்பட்டாற்போதும் அவர் எழுதுவது தவறேயானுலும் இவருக்குள்ள "சுவமதாபிமானம்" சாலப் பெரிதென அதற்கு மெச்சுகின்றோம். மேலும் அப்படியே முண்டகத்தையும் ஆராய்வாம்.

யயாயயாவ்ஹாஸாக்ஷாவூாம்ஹவீஸாநவாவஶா ஐதிநிஶ்பவிஜ்ஞாநாம்வஶாஒவெதவெஷநம்॥

"பொருள்கடோறும் (எவருக்கு) எந்தப்பிரகாரமாக அருட்சக்தியின் பிரபையாய் எய்துமோ இந்த உறுதியான ஞானம் பரமாத்துவிதமாம்" என்று சொல்லப்பட்டது. மேலும் சிவபிரானுடைய ஞானேச்சாக்கிரியைகள் இவையென்றுணர வாயுசங்கிதை சகளநிஷ்கள சதாசிவனுபனுருடைய திருமேனியிலமைத்து

தயெஹாதிகயாஶக்தா ஸோஙஸோம் கவீணம்। ஜ்ஞாநாவயாஷகந்ணெதா வாவெதஶக்ர்யாவயா॥

"அதாவது (சதாசிவனுயனாது) அங்கமண்டலம் இச்சாசக்தியும் வலப்பாதம் ஞானசக்தியும் இடப்பாதம் கிரியாசக்தியும் என்றுகூறிற்று" என்றும் காட்டியதுமாம். சிவப்பிரஸ்தாரப்பெருமையையும்சக்தித்திரயவுருவகமும் பிரகிருத அவைதிக பாசுபதீக்ஷைக்காதாரமாவது கானீரேயாதலால் என்க. இம்மயக்கம் இவர்க்குமட்டுமெல்ல; மற்று அருணந்தி சிவாசாரியருக்கும் எனக்காட்டியது சிலவரிகள். அவற்றைவிட்டு மேலே வைதிக பாசுபதோபநிடதமான 'கடவல்லியும்' என்று எடுத்துக்காட்டும் வசனத்தைப் பரிசீலிப்பாம்: இது வேயது.

தவெகூதாுவஶ்திவீதஶொகொயாதாுவ்ஸா ஊாநஹிஸோநஸாதநஃ|

"பற்றையறுத்து சிவப்பிரஸாதத்தினுல் (சிவனருளால்) அவ்விறைவன்சொருபத்தை துன்பமொழித்து இன்பமாய் பார்க்கின்றார்" என்பது. இதில் "யாதாவ்ஸாஷாக" என்றதை "யாதாஃவ்ஸாஷாக" என்று மாற்றிக்கொண்டதோற் புறங்கிடக்க, இதில் இவருக்குவந்தலாபம்என்ன? ஈசுவரப்பிரஸாதம் வித்தைக்கேதுவென்று ஒப்பாதவர் எவரேனுமிருப்பின் அவரிடமே இவ்வாதம் மணம்பெறும். இவ்வாதம் இயல்பில் வேதாந்திகளிடம் பரிபவப்படுமென்றறிந்த வித்துவான் புத்தியில் விளங்குவதாக ஏகான்மவாதவுபநிடத நெறிப்படி ஆன்மாவை சாக்ஷாத்கரிக்கலாம் அன்றிச் சிவத்தையறிதல் கூடாதாம் என்றகருத்தினுலன்றோ?

'நாயஸாதாவ்வவெநநஹெஷாநஷெயாநவஹ நாஶ்தெந|'

"ஞானப்பிரகாசத்தினுலன்றி ஸாமர்த்தியத்தாலும் புத்திநுட்பத்தினுலும் மிகுந்த கேள்விகளாலும் இந்த பரமான்மா அடையப்படமாட்டார் என்றும் கூறிற்று" என்று ஒரு சமாதனமும்சொல்லி திருப்தியடைந்தார். இங்கு ஏதோ வேதாந்திகளுக்கு ஆன்மாவினிடம் சிவத்தைசாக்ஷாத்கரித்தல்கூடாது. புத்தியிலேயே "ஆன்மாவை சாக்ஷாத்கரிக்க கூடும்" என்று இவர் எடுத்தவழி மிகவும் சித்தாந்ததெளிவு என்று சிரமேற்கொள்ளவேண்டியதுதான். அந்தோ வேதாந்திகள் "ஸவஜாதநிவஶ்தி" எல்லாவற்றையும் ஆன்மாவில் காண்பான்" என்றும் யகூதநிதிஷ்நு கூதாந ஷெஙொயயதி" "எவன் ஆன்மாவிலிருந்து ஆன்மாவை நடத்துவான்" என்றும் எடுத்து அவித்யோபாதிகசொரூபம் நியம்யமும், வித்யோபாதிகம்நியந்தாவும், ஒன்று காரியம்போலவும், மற்றது காரணம்போலவும், ஒன்று அதிட்டானமும் மற்றது அதிட்டாதாவும், ஒன்று ஆதாரமும் மற்றது

ஆதேயமும் ஆகும்என்று நிரூபித்திருப்பதைக் கண்டும் கேட்டுமறியாது புத்தியிற்றோன்றியபடி எழுதி இத்தகையபெரிய தோர் அசம்பவத்தால் ஷை வாக்கியங்கள் சவிசேஷபரமாயதுபோலவும் அதிலும் இவர்கொண்ட அவைதிகாகமங்களுக்கே சாதகமானதுபோலும்நினைத்தது மனப்பாலேயாம். மேலும் அவ்வுபநிடதமே “நேஹ நாநாஸ்தி” “இல்லை யிங்கு பலபல” வென்பதாதி அனேகவசனங்களால் ஏகான்மவாதத்தையே ஸ்தாபித்திருக்க, அது தாம்கொண்டகொள்கைக்கு நேர்மாறுகோள் எனக்கொண்ட விசிஷ்டவாதிகளான ராமானுஜரும் அவ்வழிக்கு ஆதிகுருப்போல்தோன்றிய சாம்பவரான ஸ்ரீகண்டமுனிவரும் அவற்றிற்கு வியாக்கியானஞ்செய்யாது விட்டிருப்பதையும் இவரறியார் போலும். மேலும் அதே உபநிடதம் “ஸ்தாணும்ருத்ரம் நாவஸ்தாம்க:” என்று இவர் சார்பினரான சைவரையுண்மையறியாரது வரிசையில் எடுத்துவிட்டிருக்க அவ்வுபநிடதம் எவ்விதமிவர்க்குச் சாதகமாகும்? மேலும் ‘அத்தியாச்சிரமம், சிரோவிரதம், சாம்பவம், பாசுபதம்’ என்பதாதி சொல்லேனும் கேட்கப்பெறாது ‘ஸ்தாணுமங்யே’ என்று சைவரை ஒதுக்கியது. அங்ஙனமாக இது அவருக்கென்ன சுகமாம்? மேலும் இதில் பஞ்சாக்னிகளும் த்ருநாசிகேதர்களும் (பஞ்சாக்னிகள்=அக்னிஹோத்திரர்களான கிரகஸ்தர், திருநாசிகேதர்=மும்முறைகள் நாசிகேதாக்னி சயனம் செய்தவர்) முக்கியமாக ஸ்தோத்திரம் செய்யப்படுதலால் அவர்கொண்ட பெருமையாய அக்னிஷ்டோமாக்னிஹோத்திரங்களை முற்றிலும் நிந்திக்கும் இந்த அவைதிகாகமங்கள் எப்படி உபநிடத சம்மதமாம்.

யஸ்ஸ்வாம் ஸாகாம் பரித்யஜ்ய அந்யத்ர குருதே ஸ்ரமம்। ஸஜீவந்நேவ ஸூத்ரத்வம் ஆஸு கச்சதி ஸாந்வய:॥

‘எவன் தன் சாகையைவிட்டு வேறுவிஷயத்தில் சிரமப்படுவானோ அவன் உயிருடனே தன்குலத்துடன் சூத்திரனுவான்’ என்பதாதிப் பிரமாணங்களிற்கண்டபடி வைதிகராயுள்ளோர் இவர் கொண்டாடும் ஆகமவழிசென்றால் பதிதராவரென்பதிற் றடையில்லை. அதற்கு முன்னரே பிரமாணம் சூதசங்கிதையில் காட்டினோம். ஆகவே மேலே ஈசனருட்சக்தியின் பெருமை காட்டப்பட்டது.

தமாத்மஸ்தம் யேऽநுபஸ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஸாஸ்வதம் நேதரேஷாம்॥

ஆகையால் ‘ஹிருதயாகாசத்தில் அறிவின்கண்ணே அருட்சக்தியோடு கூடச் சிவனையெவர் அறிகின்றாரோ அவருக்கே நித்தியமாகிய பேரின்பமாம்’ என்ற வசனமும் ஈசனருளை எதிர்பார்த்து அவனது அத்தியந்த அபேதப்பெருவாழ்வை விரும்பும் சிவஞானியே சிவாத்துவவிதி எனப்படுவோனாகவே, அச்சொல்லை இவர் திருடிக்கொண்டு பெரும்பெயர் சுமந்து வெளிவந்தது “கள்ளன் அரசன் வேடம்போட்டாற்போலாயிற்று”.

இங்ஙனம் 217 வரிகளுக்குள்ள விஷயம் வரிவரியாய்க்கண்டிக்கப்பட்டது. மேல் இவ்வரிகளில் எழும் அய்யரைப் பற்றி இவர்கொண்ட சித்தாந்தத்துக்கும் ஆரிய சித்தாந்தத்துக்கும் ஏதேனும் சம்மந்தமுண்டோவென்று விசாரிப்பாம். இவர் ஏதோ சிறிது பூர்வஜன்ம சுகிருதத்தால் சைவ வாசனையும் பரமபாவன காசிவாசமும் பெற்றாலும் புண்ணியபூமியில் ஜனிக்காத குறைவால் சத்சாஸ்திரத்துவேஷமும், அப்பிராமண சகவாசமிகுதியால் சதாசாரவுண்மை யறிவின்மையும், இந்த யாழ்ப்பாணத்தையரிடம் குடிகொண்டது மன்றி சத்கருமங்களைக்கனவிலும் பெறாது வளர்ந்தமையால் சிரௌதஸ்மார்த்தங்களின் பெருமையும் மனதிற்படவில்லை. மேலும் இவர் இவ்விதம் எழுதிவருவதும் அவைதிகவாதிகள் வாததினியல்பை மற்றவரறியவெழுதலால் அதுவும் ஒரு லோகோபகாரமே என்று யாமும் ஓயாது அவர் வாதத்திக்கெல்லாம் மறுப்பெழுதி ஸ்ரீசிவாத்துவித சித்தாந்தவுண்மைகளை விளக்கிவருவாம்:—

மேல் இவ்வையர் மீண்டும் விஜயத்துவஜம் ௧௧- நெம்பரில் 112 வரிகள் எழுதினர். அதில் ஆரம்பத்தில் தைத்தரீயசுவேதாசுவதரவுபநிடதங்களைப் பற்றி விசாரிக்கும் திறமை பிள்ளையார் வேஷம்! அதையும் விசாரிப்பாம். அவர் எடுத்த வசனம் வருமாறு:—

ஸ நோ தேவ: ஸுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து।
ஸ நோ புத்த்யா ஸுபயா ஸம்யுநக்து॥

‘அவர் (சிவன்) நம்மை (ஆன்மாவை) சிவஞானத்தினால் (அருளினால்) சேர்ப்பாராக என்று ஒருகருத்துறவுரைத்தனவாக ஸ்ரீ அப்பய்யதீட்சித யோகியர் பொருளபடுத்துகிறார்’ என்று. இதைச் சற்று உற்றுநோக்கில் இவர் சித்தாந்தவாபாசம் வெளியாகும். பாருங்கள்! துவக்கும் பொழுதே ஏதோ சிலவுபநிடதங்கள் சாங்கியயோக வுபநிடதங்களெனவும், சில அத்தியாசிரமவுபநிடதங்களெனவும் பொய்புது பகுபாடு செய்த இவர்க்கு இவ்வத்தியாச்சிரமச் சொல் கற்றுக்கொடுத்த உபநிடதங்களாய கைவல்ய சுவேதாசுவதரங்கள் இரண்டனுள் ஒன்றாயதூஉம்,மிகச்சிறந்ததூஉம்இதுவே. முற்றிலும் சாங்கியயோகங்களைப் புகழ்ந்தும் சாங்கியாசாரியரைத்துதித்தும் இவ்வான்ம சதசத்வாதிகள்கொண்ட சத்பிரபஞ்சவாதத்தைப் புறக்கணித்தும் பேதவாதத்தை மறுத்தும் ஈசனன்றி மற்றதைப்பொருளல்லவென ஒதுக்கியு மிருப்பதை இவரறியாது அந்தோ! அத்தியாச்சிரமபதம் ஒன்றைக்கொண்டே முற்காட்டிய ‘கஞ்சி வரதப்பன் கதையில்’ காலயவனன் கண்ணனைவெருட்டமுசுகுந்தகுகையில் புகுந்ததுபோல வேதாந்திகளை எதிர்க்க சுவேதாசுவதரத்தையடுத்தார். இவ்வுபநிடதம் சாங்கியயோகங்ளைத் தழுவியே வேதாந்த சத்சித்தாந்தம் நாட்டுமெனவும் அதிலும் ஆன்ம சூன்யவாதிகளுக்கு அணுவேனும் சகாயமில்லையெனவும் ஸ்ரீமத் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் சுவேதாசுவதர வியாக்கியானத்தில்

விரித்து நிரூபித்தார்கள். ஆயினும் அதன் ஓர் சிறிது பாகத்தை நமது யாழ்ப்பாணத்தார் அறியுமாறு இங்கு காட்டுவாம். சுவேதாசுவதரம் சாங்கியயோகங்களைத் தழுவியது.

5-ம் அத்தியாயம் 2-ம் மந்திரம்.

ருஷிம் ப்ரஸூதம் கபிலம் யஸ்தமக்ரே ஜ்ஞாநைர்பிபர்த்தி
ஜாயமாநம் ச பஸ்யேத்॥

'முதலில் பிறந்த கபில ரிஷியை எவன் பிறக்கும்பொழுதே கண்டும் ஞானங்களாலும் போஷித்தான்' என்று கபில ஞானம் சிவானுக்கிரகாதீனமெனச் சொல்லப்பட்டது. இதே விஷயம் ஸ்ரீவாசஸ்பதி மிச்சிரர்யோகவாசஸ்பத்தியத்தில், 'ஸர்வேஷாமாவிர்பூத: கபிலோ நாம மஹர்ஷி:' என்ற சூத்திர வியாக்கியானத்தில் எழுதியிருக்கிறார். இதை இவர் கண்டிலர். மேலும் ஸ்ரீஜகத்குருஸ்வாமிகள் எங்கும் சாங்கியர் யோகிகளை மறுத்தே எழுதுவார். அவர்கள் இந்த மந்திரத்துக்கு ஹிரண்யகர்ப்பமாக வியாக்கியானஞ்செய்தது இவருக்குச் சாதகமல்ல. எங்கும் அவர் சாங்கியயோகமதங்களுக்கு விரோதமாக சுத்த வையாசிகதர்சன ஸ்தாபபராக அவதரித்த மகானுபாவனுதலாலென்க. இனி அவர்கள் திருவுரையின்படி இது கபிலமுனியைக்குறித்ததல்ல, மற்று ஹிரண்யகர்ப்பனையே என இவர் முறணுவாறெனின் அம்மாமுனிவர் பிரமசூத்திரபாஷ்யமாதி பிரஸ்தானத்திரயபாஷ்யங்களிலும் ஸாங்கியயோகங்களை மறுத்திருக்கவும் ஸ்ரீமத் பாதராயண முனிநாதன் ஸ்பஷ்டமாகச் சூத்திரங்களில் அப்படியே சாங்கியயோகங்களை ஜைனுதிமதங்களைப்போலவும், ஒதுக்கிவிட்டிருக்க, இவர் அதை யாதும் நோக்காது சாங்கியயோகவுபநிடதங்கள் ஏகான்மவாத வுபநிடதங்களென்று எல்லாவற்றையும் 'எல்லுசெட்டி லெக்க ஏகலெக்க' என்று வழங்கி மயக்குற்றுச் சித்தாந்த சித்தப்பிரமைகொண்டுசிவன் என்ற சொல்லைக்கண்டால் பாஞ்சராத்திரமும் தம்மதநூலே என, காதல்கொண்டவனுக்குக் கண்டதெல்லாம் பெண்' என்றவாறு பேசிவந்து புதியமத ஆன்மசூன்யவாத பரமாசாரியராகப் பார்க்கின்றார். இவருக்கு இம்மந்திரம் 'இம்மந்திர வுபநிடதத்தில் சோற்றில் நஞ்சே' யெனக்காட்டினோமென்க. மற்று நியாயவாதிகள் அவைக்களத்தில் வெற்றிக்கொடி நாட்டி நேற்று இவர் கனவுகாண்பதற்குப் பூர்வக்ஷணம்வரை கனவிலும் கூட எவரும் வேறெண்ணங்கொள்ளாது ஒருவழிப்பட்டு புகழப்பட்ட சாங்கியயோக பாசுபத பாஞ்சராத்திரங்களின் வேருய ஸ்ரீபாதராயணமுனிவர் எடுத்துக்காட்டிய சுத்த வைதிக அத்துவித சற்சமயத்தை இன்று சாங்கியயோகங்களுடன் சேர்த்தவிவர் கனவின துணிவுக்கு இது குற்றமாகாதாம்போலும்! மனிதன் நாற்காற்பசுவாகவும், கோடுள்ள முயலைக்கொண்டுவந்ததாகவும், அவனுக்கே மூன்றுகொம்புள்ளதாகவும் கனவிற்றோன்றியயாவும் இவர்கொண்ட ஆன்ம அசத்துவவாதத்திற்கழகேயாம். மேலும் இம்மந்திரம் கபிலரைப் புகழ்ந்ததாகாதொழியினும் ஸ்பஷ்டமாய் இறுதியில் ௬-வது அத்தியாயத்தில் ௧௩-வது மந்திரத்தில்,

தத்காரணம் ஸாங்க்யயோகாதிகம்யம்।
ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:॥

சாங்கியயோகங்களாலறியப்பட்ட அக்காரணப்பொருளான தேவனை அறிந்தால் அவனுக்கு ஸர்வபாசங்களும் ஒழியுமென்றுகொள்வதை எப்படி மறுத்திடுவார்? இதற்கு எவரும் விபரீதவுரை செய்ய்வுமில்லை, செய்யவுமியலாது. இங்ஙனம் சாங்கியயோகங்களாற்றான் பரவஸ்துவிஞ்ஞானமென்ற இவ்வுபநிடதம் இவர்கொண்ட ஆன்மசூன்யவாதவாகம சமரச சித்தாந்தமாயினும் ஒருவாறு இவருக்கு அதில் யாதும் பாத்தியமுண்டெனலாம். அதுவோ முற்றிலும் இல்லை. அது இவர் பகைத்துவரும் வேதாந்தத்தையே அனுசரித்ததென்று காட்டுவோம். அவ்வுபநிடதம் இவர்கொண்ட சித்தாந்தநூல்களான அவைதிக சிவாகம காமிகாதிகளைப்போல் அனுதிமுப்பொருள்களை வெளிப்படுத்திக் கூறுது.

போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா।
ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்॥

போக்தா, போக்கியம், பிரேரகமென்று எண்ணப்படும் மூவகைப்பட்டனவெல்லாம்பிரமமென்றே சொல்லப்பட்டதென்று ௧-வது அத்தியாயம் ௧௨-வது மந்திரத்தால் பிரமமே சர்வோபாதானமென்று நிரூபித்தது. மற்றதெல்லாம் சிவனுக்குக் கீழ்ப்பட்ட தத்துவங்கள். அவைதிகாகமத்தை மறுத்து ௩-வது அத்தியாயம் ௯-ம் மந்திரம்.

யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித்।
யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கஸ்சித்॥

'எவனுக்கு மேலும் கீழுமான பொருளில்லை, எவனுக்குச்சிறியவனும் பெரியவனுமில்லை' என்று சிவாதிரிக்தவஸ்துவை மித்தையெனக்காட்டியது. இவர்மதத்தில் சிவனுக்கு மேல் ஒருபொருள் கூடாதாயினும் அவனுக்குக் கீழானதும் இல்லையென்பதும்பொருந்துவது மலடிசூலாம். இனியும் "யாவையும் சூன்யமே" என்றுமாதலால் அதுவும் எமக்குப் பொருந்துமென இவர் வாதிப்பரேல் ஆன்மசொரூப சூன்யவாத சுத்த வீரரே! நில்லும்! திருசியசூன்யவாதம் செய்ததாக எம்மைப்பிழைப்பிடித்தீர். ஏகான்மவாதி எனறேசினீர். மிச்சாவாதியென மிரட்டினீர். மாயாவாதியென வுரைத்து மகிழ்ந்தீர் புறச்சமயி எனப்புகன்றீர். அகம்பிரமவாதிஎன ஹாஸ்யஞ்செய்தீர். யாழ்ப்பாணத்தையரே! உமது கதியைப்பாத்துச் சற்று கவனிப்பீராக. ஆன்றோர் உம்மைநோக்கி விடுக்கும் விடைக்கணைகளை நோக்குவீராக. ஓ விவாத கம்பீர! நீவிர் யாவர்? சேதனனென்பீரேல், நீர் உள்பொருளா இலபொருளா? சதசத்தென்பீரேல், ஆன்மா இடம் ஒருக்காலும் சேராத சதசத்பாவங்கள் சேருமா? வசனத்தால் சேருமெனபீரேல? 'யாவையும் சூன்யம்' என்று எங்ஙனம் சூன்யத்தை மெய்கண்டார் கொண்டார் அவரும் நீரும் சூன்யமாதற்கு எவருபதேசித்தார்? யாரால் உபதேசிக்கப்பட்டீர்?' 'சூன்யகுரு சூன்யசிஷ்யனுக்கு நீயும் நானும் சத்தும் அசத்தும் (உள்பொருளும் இல்பொருளும்) என்று, உபதேசித்தாரென்பீரேல், பளா! பளா! பண்டிதமண்டல சார்வபௌம! ஆத்துமாவுக்கு (அசத்தாத்துமாவுக்கு) அந்தோ! சூன்யமோக்ஷத்துக்காக, அந்தோ! சூன்யமலநிவர்த்திக்காக, அம்மம்ம! அத்யந்த அசத்பாச நிவி

ருத்திக்காகவா நீர் சமயம், விசேஷம், நிர்வாணம் முதலிய தீக்ஷைகளையும் அனேக விரதங்களையும் பலகோடி மந்திராப்பியாஸ யோகாப்பியாஸங்களையும் செய்கின்றீர். மெத்த நியாயம். 'ஆன்மா உள்பொருள், அவனே பிரமம், அவனிடம் தோன்றியதே உலகம், அவ்வுலகத்தோற்றமே பந்தம்' அஃது ஒழிவதே முக்தி' என்று விதிக்கும் வேதாந்திகளை நிந்திக்கவேண்டியதே உமது சடங்ஙயிற்று. யாழ்ப்பாணத்தவரே! 'யானுள்ளேனல்லேன் உள்ளேனுமாம்' என்னும் இரண்டாவான்மவாதி? ஜைனரும் அஸ்திநாஸ்தியென்று சதசத்வாதமே செய்கிருர். அவ்வண்ணமிருக்கும் உம்மிடம் ஒரு ஜீவன் முளைத்து "யான் உள்ளவனே" என்று தனது சத்தையைஸ்தாபித்துக்கொள்வதே அசாத்தியமாயிருக்க, அவன் சொரூபபூத அகண்டாத்துவித சித்கனசொரூபமாதலால் எவ்விதமஸ்தாபிக்கப்படுவான்? தார்க்கிகபுங்கவ! தன்னையறியும் பிரமாணம் காண்டலாலல்ல புலன்வழிதோன்றுமையால். அறிவாதிளால் அறிபவனுமல்ல; ஏதுவுக்கும் துணிபொருளுக்கும் உடனிகழ்ச்சியறிவெனப்பட்ட வியாத்தியறிவுண்டாகச் சபக்ஷமின்மையாலும் திருஷ்டாந்தமின்மையாலும், உபமானமோ முற்றிலும் கூடாது. சத்தமோ மிகவிந்தை! சப்தமே முக்கியப் பிரமாணமான "சூன்ய" மெய்கண்டார் சித்தாந்தம் ஆன்மாவின்உண்மையை சம்சயமாக்கியது. ஆகவே எவ்வளவையாலும் காணப்படாதவான்மஆச்வாசம்வே தனுப்பிரத்தியக்ஷத்தாலல்லவோ அறியப்படவேண்டும். அது ஒருவருக்கொருவர் உபபாதனஞ் செய்யக்கூடாததோர் சுவானுபவரூபம். இதை மற்றவருக்கு உபதேசிக்க முயன்றால் செவியிலாதானுக்கு ஒலியை எழுத்துமூலமாயும், கண்ணில்லாதவனுக்கு செம்மை கருமையாதிகளைச் சொல்மூலமாகவும் கற்பிக்க முயன்ற குருநாதன் முயற்சிபோல் அம்முயற்சி பயன்படுமேயன்றி வேறில்லை. இங்ஙனம் தான் உள்பொருளோ இல்பொருளோ என்ற ஆன்மா, அஸ்திநாஸ்தி வாதமும் சித்தாந்தமும் ஆஸ்திகமும் மோக்ஷசாஸ்திரமும் வைதிகமுமாம். ஐயரே! வெகு அழகு. ஓ கலி சக்ரவர்த்தீ! நீ கருதிய பயன் கைகூடியது. உலகத்தில் மேற்கண்ட வாதிகள் மலிந்தார்கள். நிற்க; பிரகிருதத்தை அனுசரிப்பாம். ஆன்மசத்தையில் சம்சயங்கொண்டவர் ஈசன் சொரூபத்தை எங்ஙனம் நிரூபிப்பாரோ தெரியவில்லை. ஒருவன் ஒரு கதை சொன்னான். அதாவது—'ஒரு ஊரில் ஓர் தனவானிருந்தான். அவனுக்குக் கழுத்துக்குமேல் அவயவமில்லை. அவன் சதாசாரியனிடம் சென்று வித்தைகளைக் கற்றுணர்ந்து பிறருக்கும் உபதேசித்தான். அவனுக்கு யாது பெயரிடலாமெனப் பெற்றோர் மனம்வருந்தி மெய்கண்டார் சித்தாந்தசாஸ்திரத்தைப் பார்த்து உணமையறிந்து 'சதசத்தையர்' என்று பெயரிட்டார்கள். அவர் வெகுகாலம் ஜீவித்திருந்து ஒருபெண்ணை மணந்து அவளுடன் கொஞ்சிக்குலாவி மக்களைப்பெற்று மகாதேவன்றிருவடிகளை வாயால் வாழ்த்தி அவன் குஞ்சிதபாதநிழலில் இரண்டறக்கலந்து போலி ஐக்கியப்பெருவாழ்வு பெற்றான்' என்றற்றொடக்கத்தனவான இக்கதையில் உள்ள சதசத்தையரென்பவர் வாயில்லாது உபதேசித்தும் காதில்லாமற்கேட்டதும்போலவே இங்கு சதசத்தாய ஆன்மா பிரமவிசாரம் செய்து உபதேசித்து முக்திபெறுவது. இஃதெல்லாம் ஓர் புறங்கிடக்க, இவர்கொண்ட பாசுபதமதத்தில் 'ஈசன் எல்லாப்பொருள்களையும் சிருஷ்டிப்பான் அன்றி (அபாவத்தை) இன்மையை அவன் சிருஷ்டிப்பனே! இவ்வுபநிடதமோ அபாவமும் ஈசசிருஷ்டமும்' என்கின்றதே அதன் கதியாதெனில்,

𑌭𑌾𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌨𑍀𑌡𑌾𑌖𑍍𑌯𑌂 𑌭𑌾𑌵𑌾𑌭𑌾𑌵𑌕𑌰𑌂 𑌶𑌿𑌵𑌂।

"பாவத்தால் அறியற்பாலன், ஓரிடமாதியற்றவன், பாவம் அபாவம் இரண்டையும்செய்தவன் சிவன்' என்று 5-ம் அத்தியாயக் கடையிலுள்ள மந்திரம்கூறுகின்றதே. வேதாந்திக்கோவெனில், அவனிடம் (ஆன்மாவிடம்) பாவாபாவரூபப்பிரபஞ்சம் ஏற்றப்பட்டமையால் அது ஒவ்வும். இதுமட்டோ! பிர்ம்மசொரூபம் ஸஜாதிவிஜாதி சுகதபேதமற்றது என்றும் அசங்க உதாசீன சொரூபம்என்றும் சொல்லுகின்றது இவ்வுபநிடதம். அதுவருமாறு:— 1-ம் அத்தியாயம் 8-ம் மந்திரம்

𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍋 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾।
𑌤𑍍𑌰𑌯𑌂 𑌯𑌦𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍇𑌤𑌤𑍍॥

"ஆன்மா அநந்தன், விசுவரூபன், அகர்த்தா, முவ்வகையிலும் இதெல்லாம் பிரம்மமே என்றறிந்தவன்' என்று ஆன்மா அகர்த்தாயென்றது. சைவாகமங்களோ, "அவன்கர்த்தா' வென்று நிச்சயித்துரைக்கின்றது. அதில் '𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾' என்று கர்த்திருத்துவமே ஈசனுக்கு (ஆத்மாவுக்கு) லக்ஷணமாகின்றது' என்று 4-ம் அத்தியாயம் 18-ம் மந்திரம்

𑌯𑌦𑌾𑌤𑌮𑌸𑍍𑌤𑌨𑍍𑌨 𑌦𑌿𑌵𑌾 𑌨 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍 𑌨 𑌸𑌨𑍍𑌨 𑌚𑌾𑌸𑌚𑍍𑌛𑌿𑌵 𑌏
𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂।

"எஞ்ஞான்று இருளுளது அன்று பகலில்லை இரவில்லை; சத்தில்லை அசத்தில்லை, சிவனே ஒருவன், அஃதக்ஷரம்' என்றுளது. இதில் ஸஜாதியாகிய சீவர்களையும் விஜாதியாகிய ஜடத்தையும் 'சத்திலை அசத்திலை' என்று வேறு எடுத்துவிட்டமையால், கேவலன் (ஒருவன்) என்றது சுகதபேதத்தைவிலக்கியது. இம்மந்திரத்தில் ஆதிகாலம் எனப்படும் இருட்காலத்தில் "ஸத்து அஸத்து இரண்டுமிலை' என்றதனுல் அச்சமயம் கேவலம் பிரம்மமே என்றும் உள்ளதென ஏற்பட்டது. அங்ஙனமாயின் ஆன்மகோடிகள் எவ்விதம் ஆயினவென அதன்வரலாற்றைக் குறிக்கவே 'அஃதக்ஷரம்' என்றதறிக. அக்ஷரம் என்றால் ஜீவனுக்குப்பெயர். இதேவுபநிடதம் பிரதமஅத்தியாயத்தில்:—

𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃।
𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃॥

'க்ஷரம்பிரதானம், அமிர்தன் அக்ஷரனும், க்ஷரத்தையும் ஆன்மாவையும் தேவனொருவனான ஹரனே ஆள்வான்' என்று சொல்லப்பட்டமையானும் சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் நான்காம் அத்தியாயத்தில்

யத்வை க்ஷரம் தத³வ்யக்தம் யத³ம்ருதம் தத³க்ஷரம்|
தாவுபௌ அக்ஷராத்மாநாவேகோ தேவஸ்ஸ்வயம் ஹர:||

"எது க்ஷரம் அது அவ்யக்தம்; எது அக்ஷரம் அது அமிர்தம்; இவ்விரண்டும் க்ஷராத்துமாக்களாம் (இவைகளையாளுபவன்) ஒரேதேவனும்- அசுரன் என்று விரித்தமையானும் அதேபுராணம்-

க்ஷரம் ப்ரக்ருதிரித்யுக்தம் புருஷோக்ஷர உச்யதே|

"க்ஷரம்-பிரகிருதி புருடனே அக்ஷரன்' என்று கூறினமையானும் ஸூதசங்கிதையில் பிரமகீதை

க்ஷரம் மாயா ததா³க்ஷரம் ஜீவரூபகம்|
க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:||

"க்ஷரம்மாயையாம்; அக்ஷரம் ஜீவரூபமாம், க்ஷராத்துமாக்களை ஆளுபவன் தேவன் ஒருவனும்' என்றதனாலும் என்க. இதனால் இந்தவுபநிடதம் பலவிடங்களில் அத்யாரோபஅபவாதந்யாயத்தால் 'ஜடஜீவேச' நிரூபணஞ்செய்து முடிவில் "எல்லாம்பிரம்மமே" என்ற சறசித்தாந்ததில் முன்னர் யாம் எடுத்துக்காட்டிய ஸூதசங்கிதா வசனப்பிரகாரம் முடிவெய்துகின்றதாம் என்றறிக. அங்ஙனம் 'அக்ஷரம்' என்றபெயரும் ஜீவனுக்கு உண்மையில் அக்ஷரமெனப்படும் பரமாத்மாம்சம் என்று சுருதிகள் உபசரித்தமையானும் சோதிப்பில் அவனேயாதலாலும் என்க. முண்டகத்தில்

யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா:|
ஸஹஸ்ரஶ: ப்ரபவந்தே ஸரூபா:||
ததாக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா:|
ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி||

"எங்ஙனம் ஜ்வலிக்கும் அக்கினியில் பொறிகள்பறக்கின்றனவோ, ஆயிரமாயிரமாக சமானரூபங்களுடன் அங்ஙனமே அக்ஷரவஸ்துவிடம் அனேகம் பாவங்கள் உண்டாய் அதனிடமேயடங்கும்' 'என்று அக்ஷரத்தின்கூறு ஜீவன்என்றுபசரிக்கப்பட்டது. மேலும் இதேயுபநிடதத்தில் 5-ம் அத்தியாயம் 5-ம்மந்திரத்திலும்

த்வே அக்ஷரே ப்ரஹ்மபரே|

'பிரம்மமும் ஜீவனும் அக்ஷரமாம்' என்றும் இரண்டிற்கும் அக்ஷரப்பெயர் சொல்லப்பட்டது.

நவத்வாரே புரே தேஹீ ஹம்ஸோ லேலாயதே பஹி:||

என்பதாதிமந்திரங்கள் பற்பல இதில் ஜீவப்பிரம்மைக்யத்தைக்காட்டியிருக்க, இவர்யெடுத்த 'ஸநோ புத்த்யா ஶுபயா ஸம்யுநக்து' என்றமந்திரம் அவ்வுபநிடதத்தில் 3-ம் அத்தியாயம் 4-மந்திரம் 4-அத்தியாயம் 1-மந்திரம் 4-அத்யாயம் 12-மந்திரம் ஆக மூன்றிடங்களில் உண்டு. அவற்றில் முதலும்கடையும்ஹிரண்யகர்ப்பனைச் சிருஷ்டித்த பரமபுருஷனிடம் அப்பிரார்த்தனைசெய்யப்பட்டது. இடையேயுள்ள மந்திரத்தில் ஸர்வலோகங்களுக்கும் உத்பத்தியாதிகளுக்கும் இடமான பரவஸ்துதடஸ்தபிரம்மம் சொல்லப்பட்டது. ஆகையால் இது சிவாகமப்பிரசித்த சிவனருளைச்சொன்னதாக எடுத்தது இவர்மயக்கமேயென்க. ஏன் எனில், இந்தசுவேதாசுவதாவுபநிடதம் சொல்லிய ஞானத்துக்கும் ஆகமோக்த ஞானத்துக்கும் வேற்றுமைவெளியாதலால் என்க. ஆதலானுன் ஸ்ரீகூர்மபுராணத்தில் சுசீலோபாக்கியானத்தில் ஸ்ரீமத் சுவேதாசுவதரமகரிஷியினிடம் ஸ்ரீ சுசீலமகாராஜன் அடைந்த 'சிவஞானவைபவ' முரைக்குமிடம்

ஸோநுக்ருஹ்யாத ராஜாநம் ஸுஶீலம் ஶீலஸம்யுதம்| உபதிதேஶ ஶார்வம் ஜ்ஞாநம் ஸ்வஶாகோக்தம் ஹிதப்ரதம்| ஸர்வவேதவிஸாரஞ்ச பஶுபாஶவிமோசநம்|| இதி-

உவாச ஶிஷ்யாந் ஸம்ப்ரேக்ஷ்ய யே தத்ராஶ்ரமவாஸிந:|
ப்ராஹ்மணாந் க்ஷத்ரியாந் வைஶ்யாந் ப்ரஹ்மசர்யபராயணாந்||

மயா ப்ரதர்ஶிதாம் ஶாகாமதீத்யைவ ஸமாஹிதா:| ஸமாஸதே மஹாதேவம் த்யாயந்தே நிஷ்கலம் ஶிவம்||

"அம்முனிவர் பிறகு அவ்வரசனான சுசீலனை அனுக்கிரகித்து ஹிதத்தைத்தருவதும், தனதுசாகையில் சொல்லப்பட்டதும், எல்லாவேதங்களிலும் சித்தாந்தமானதும், பசுக்களின் பாசத்தை ஒழிப்பதுமான பாரமேசுவரஞானத்தை யுபதேசித்தருளினர்' என்றும் அவ்வாச்சிரமவாசிகளும், ப்ராம்மணர் க்ஷத்திரியர், வைசியர் என்றமூவருணத்தவரும் பிரம்மநிஷ்டருமான சீடர்களைப்பார்த்து "எம்மால் (உங்களுக்கு) காட்டப்பட்ட இச்சாகையை அத்யயனஞ்செய்து அதன்படி நிஷ்களனான மகாதேவனைத்தியானித்து நற்கதியடைந்தார் எனப்பலர் உபதேசித்தார்' என்றும் சொல்லப்பட்டது. இங்கு தனதுசாகையிற் சொல்லப்பட்டது' என்று சுசீலமகாராஜனுக்குபதேசிக்கப்பட்ட ஞானத்துக்கு விசேடண மளிக்கப்பட்டமையால் அது இவர்கொண்ட அவைதிகாகம திருஷ்டஞானமன்றென்றாயிற்று. பிறகு சிரோவிரதம்போல் இதுவும் ஏதோ ஒரு சாகையின் தருமமோவெனச் சங்கை நிசுமாவண்ணம் எல்லாவேதங்களிலும் சித்தாந்தமானதென்ற அடை கொடுக்கப்பட்டது; இப்படிக்குள்ள ஸர்வவேதசித்தாந்தமான இது ஆகமங்களுள் அதிலும் அவைதிகங்களானவைகளில் சொல்லப்பட்ட தீக்ஷையைக் குறித்ததென்பது மிகவும் பரிகசிக்கபபடுமோம். இவர்கொண்டபடி அச்சுசீலமகாராஜனுக்குபதேசிக்கப்பட்டது ஆகமசித்த தீக்ஷையானால் ஏன் சாகையில் சொல்லப்பட்டது?"எல்லாவேதங்களிலும்சித்தாந்தமானது' என்ற இரண்டு பதங்களும் வாளாவொழியும். மேலும் உபதேசிக்கப்பெற்ற இம்மூவருணத்தவரென்று குறித்தமையானும் இது எவ்வழியிலும் அவைதிகமல்லவென்றாயிற்று. ஆகவேஸ்ரீசங்க்ஷேபசாரீரகாசாரியசுவாமிகள்சொன்னபடிஸ்ரீமத்தத்துவிதாத்மவிஞ்ஞானமே இங்கு ஈசனிடம் பிரார்த்திக்கப்

பட்டதென்பது நியாயம். ஆதலாற்றான் "எம்மால் காட்டப்பட்ட விச்சாகையை அத்தியயனம் செய்தே" என்று ஆசிரியர் தேற்றினர். சர்வவேத சித்தாந்தம் நிறைந்த தன் சாகையை அத்தியயனஞ்செய்து அதன்பொருளை நன்கறிந்தோர்க்கு அறியவேண்டியது வேறில்லையாதலால் அதுவே போதுமென்றது அதன்கருத்து. ஆதலால் அவைதிகாகமங்களே இதனால் மறுக்கப்பட்டன. வேதங்களெல்லாம் இதற்கு மேற்கோளும் ஆதாரமுமாகவே அதை மறுத்தல் மறமென்றார். இப்படிப்பூர்வோத்தர விருத்தமாகப் பிறர் திவ்யாஸ்திரங்களைத் தான் வழங்க எத்தனித்தது ஜலந்தரன் ஆயுதப்பயிற்சிபோல் முடிந்தது. நிற்க, இதுபோலவே தைத்தரீயமும் முடியுமானாலும் அவ்வுபநிடதத்தையும் ஒருவாறு விசாரித்து அதுவும் அறிவித்தது அத்வைதாத்ம விஞ்ஞானத்தையேயன்றி மற்றதையல்லவென்று நாட்டுவோம். இவர் காட்டியவசனம் தைத்தரீய கிலகாண்டத்துள்ள மகோபநிடதமென வழங்கப்படும் நாராயணவுபநிடதத்தில் ஆதியில் உள்ளது. இது ஆதியில் தகரவித்தையைக் குறித்துப பிறகு அந்தராதித்த வித்தையை விரித்து மேல் காயத்திரியில் இவ்விரு வித்தைகளையும் உபசரிக்கின்றது. இதில் மேற்காட்டியபடி முதல் அனுவாகத்திற்றானே.

யத: பரம் நாந்யதணீயஸம் ஹி பராத் பரம்||

'எதனினும் சிறிதும் யாதுமில்லை, எது பெரிதுக்கெல்லாம் பெரிது' என்றும்,

ததேவ பூதம் தது ஸத்யமாஹு:||

'அதுவேயுள்ளது, அதுவே சத்யம்' என்றும்,

ஜ்யோதிர்ஜ்வலதி ப்ரஹ்மாஹமஸ்மி||

யோஹமஸ்மி ப்ரஹ்மாஹமஸ்மி||

அஹமஸ்மி ப்ரஹ்மாஹமஸ்மி||

'ஜோதி ஜொலிக்கின்றது, பிரமமாய் யானுளேன், யாவனாய் யானுளேன், பிரமமாய் யானுளேன், யானேயுளேன், பிரமம், யானுளேனென்றும்,

யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்|

யஸ்மான்னாணீயோ ந ஜ்யாயோஸ்தி கஶ்சித்||

'எவனிலும் மேலும் கீழும் சிறிதுமில்லை, எவனிலும் சூட்சுமம் பெரிதும் யாதுமில்லை' என்று ௧௨-ம் அநுவாகத்தும்,

வேதாந்தவிஜ்ஞானஸுநிஶ்சிதார்தா:|

ஸந்யாஸயோகாத் யதய: ஶுத்தஸத்வா:||

'மறைமுடியுணர்வின் பொருளில், தெரிந்தோர் சந்நியாஸயோகத்தானே சுத்த சத்துவர் எய்தியவர் எவருமென்றும், சுவேதாசுவதரம்போலவே இதுவும் வேதாந்தங்களனைத்தைத் தழுவியே வருகின்றது. அன்றிஇதில் வைதிக விரஜாதிஹோம மந்திரங்கள் இறுதியில் 65, 66, அனுவாகங்களில் படிக்கப்படுகிறது. அடுத்தாற்போல வைசுவதேவ மந்திரங்கள் ௬௯-ல் படிக்கப்படுகின்றன. ௭௯-ல் யஞ்ஞம், அக்னிஹோத்திரம் இவைகள் மிகவும் சிறந்ததெனப் புகழப்படுகின்றன.

௮௰-ம் அனுவாகம் ஆத்துமப் பிரகாசத்தைச்சொல்லி உத்தமகதி சூரியதுவாரத்தானும் (அர்ச்சிராதி மார்க்கம) மற்ற மத்தியகதி சந்திரமார்க்கத்தானும் (தூமாதிமார்க்கம்) இரண்டுஞ்சொல்லப்பட்டது. இவ்வுபநிடதம் பரசிவபிரான் பெருமையை விளக்குவதேயாயினும் அக்னிஹோத்திரப்பிரசம்சையும் விரஜாஹோமமந்திரங்களும் தனது திருமுடியிற்றுலங்கப்பெற்றமையால் அந்தப் பரமபாவனாக்னிஹோத்திர விரஜாபஸ்மதாரணங்களைப் பராஹம்ஸாதிகளுக்குக்குறித்துச் சந்நியாசத்தைச் சிலாகித்து அவருக்கு வேதாந்த விசாரத்தாலேயேபொருணிலை கூடுமெனவும்புகழ்ந்தது. ஆகையால் வைதிக ஸம்ஸ்காரங்களைப் பெற்று சத்குருபாஸ்திசெய்யும் புண்ணிய சிலருக்கேற்ப அகண்டாத்துவித விஞ்ஞானத்தையே ஈசனருளவேண்டும் என்று அவ்வுபநிடதம் வேண்டிக்கொண்டதாக அதற்குப் பொருள் உரைத்தல் நியாயமேயன்றி வேறுவழி எவ்வாற்றானும் பொருந்தாது. மேலும் சுவேதாசுவதர வுபநிடதத்துள்ள அனேகவசனங்கள் இதனுள்ளும் காணப்படுதலாலும் அங்குள்ள 'யதா தப:' என்ற மந்திரங்குறித்தபடி காயத்ரீவித்தை இதனிடம் விரிந்தமையாலும இரண்டும ஒருபொருள் உள்ளதாகவே இருக்கவேண்டுமாகவே இதற்கு அவைதிகாகமத்துள்ள சங்கேத சிவனருள்பொருளாவது 'அன்னத்துக்கு அண்டங்காக்கைநடைபோல்' எஞ்ஞான்றும் பொருந்தாதென்க. மேலும் ஸ்ரீ ஹரதத்தாசாரிய மூர்த்திகள் "ப்ரஹ்மாணிவம் வதநவ:' என்றசுலோகத்தில் உபதேசித்தருளியவாறு ஸர்வாகமங்களும் மூலதனமான பஞ்சப்பிரமமந்திரங்களும் இதனுள்ளேயிருப்பதுபற்றி வைதிகசர்வாகமங்களும் கூட இதனையே வணங்கவெண்டியிருக்க, இவ்வேதாந்த சூளாமணி தனது ஐந்து அனுவாகங்களையேபற்றி உயிர்நிலைபெற்றவைபோலஉலாவும் அவைதிகாகம தீக்ஷாப்பிரயோஜன சங்கேதம்சிவஞானத்தைப் புகழ்ந்ததெனல், "அரசன் அடிமை,வீட்டாகாரத்தை ஆசிரயித்ததையொக்கும்" என்றொதுக்குக. மேலும் ஸ்ரீமத்வைதிககுல மூலதனமான, ஸ்ரீகாயத்திரீ வித்தையாயவிது என்றும் சர்வவர்ணசாதாரண அவைதிகாகமத்துள்ள ஞானத்தையும் அருளையும் புகழாது. அங்ஙனமாயின், குலமங்கையர் விலைமங்கையரைப் புகழ்ந்ததாகுமே! மேலும் முற்காட்டிய சுசிலோபாக்கியனத்தில் 'எவ்வாறு மூவ்வருணத்தவரே சுவேதாசுவதரசாகைக்கதிகாரிகள்' எனக் குறிக்கப்பட்டனரோ அவ்வாறு காயத்ரியின் அதிகாரமும் உள்ளது. 'துவிஜர்களே இதற்கதிகாரிகள். ஆகவே அவருக்குச் சுத்தவைதிகநெறியின்றி வேறயாதும் கூடாது' என்று முன்னரே சூதசங்கிதாவசனங்களால் காட்டினோமாகையால் இவர்மெள்ள மகோபநிஷத்தின்கருத்தை அவைதிகாகமபுருஷனிடம் திருப்பமுயன்று சுத்தவைதிக ரணதீர கோதண்டதீக்ஷாகுருவினிடம் பற்றுதலடைந்தசீதாப்பிராட்டியார் மனதைராவணன்தன்வயப்படுத்தமுயன்றதையேஒத்ததாயிற்று. இவ்வுபநிடதம் ஸ்ரீமதாசாரிய ஹரதத்தமூர்த்திகள் ஸ்ரீமத்தீக்ஷிதேந்திரயோகிகள் முதலிய மூதறிஞர்கொண்டவழி, நாராயணசரீரத்துக்குச் சரீரியாகப்பரசிவோபாஸ்தியை அர்த்தவாதமுகத்தாற்காட்டி தகரவித்தை, அந்தராதித்யவித்தை

காயத்ரீவித்தைகளை ஈசனிடம் உபசங்கரிப்பது. ஆகவே அந்தவிதமான உபாஸ்திக்குவேண்டிய வேதாந்த விஞ்ஞானமே இவ்விடம் சொல்லப்படவேண்டியது மரபு. அதைவிட்டு அந்தவுபநிடதம் ஏதோ ஆகமோக்த திரிபதார்த்த ஞானாதிகளை வேண்டிக்கொண்டதென அதற்குப் பொருளுரைத்துக் களித்தல் தன்கூட்டத்தில் சிலாக்கியமாயினும் பிறர் அதை எவ்விதத்தும் ஒப்பார். (ஶுவிஶேஷாது)"சொற்சிறப்பானும்' என்ற பிர்ம்மசூத்திர வியாக்கியானத்தில் ஆசிரியர் ஸ்ரீகண்டமுனிகளும் இவ்வுபநிடதம் மேற்கண்டபொருள் உள்ளதே என்றார். அன்றி வேறுகூறினாரில்லையே. மேலும் 'சாஸ்திரயோனித்துவாததிகரணத்தில்' அவர்கள்வேதங்களே சாஸ்திரங்கள் எனவும் அபசூத்திராதிகரணத்தில் வேதங்களாற்றானே அவனையறியவேண்டும்' எனவும், ஸித்தாந்தம் செய்தது இவரறியார்போலும்! மேலும் இந்தவுபநிடதம் தைத்தரீயத்தைச்சேர்ந்த 'ஆரண்யகம்' என்றபாகத்துள்ளது. இதற்கு 'ஆருணம்' என்றதோர்பெயரும உண்டு. இத்துடனே தானே தைத்தரீயவுபநிடதம் படிக்கப்படும். அதையும் சேர்த்து பத்துப் பிரஸ்னங்களுக்கும் பொருளொன்றுபடுத்தினால் இது கேவலாத்துவித சற்சித்தாந்தத்தையே எடுத்துக்காட்டுமுறையால் பிரமமேதம், பிதிர்மேதம் ஆருணகேதுகயனம் என வைதிக கன்மங்களையும் விதித்துவருதலால் அதனிடையே ஒருசொல் ஆகமார்த்தத்தைத் தழுவியதென்பது பிரசண்டப் பிரளயாக்னியின் நடுவில் ஒரு பனித்திவலை நின்றதென்பதாகும். ஆகவே இவர் சிரமப்பட்டு மேலே சிலவரிகளால் ஒரு ஆகமவசனத்தை எடுத்துக்காட்டியது நிஷ்பிரயோஜனமாயிற்று. அங்ஙனமாயினும் அவ்வசனத்துள்ள கருத்து எம்மை யாதும் பாதிக்காது. மற்றுண்மையீதெனவிளக்கினும். இந்த தைத்தரீயசுருதியையே கிருஷ்ணயஜுஸென்பது. இதற்குள்ள சாகைகள் ௮௬. அவற்றுள் சுவேதாசுவதரம் ஒருசாகை, ஆருணம் மற்றொருசாகை. ஆருண சாகையைக்கண்டவர் அருணமகரிஷி. ஆகையால் இரண்டும் ஒருபொருள்கொண்டு முடிதல் மிகவும் நியாயமாம், இதன் விரிவை ஆசிரியர் தீக்ஷிதரவர்கள் காயத்திரீவித்தையில் விரித்தனர். இவ்வளவால் சுவேதாசுவதரம் இவருக்குச்சிறிதும சம்பந்தமில்லாமல் சிவாத்துவ சித்தாந்த சற்சாஸ்திரமென்றேற்பட்டது. அதில்,

யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா:|
ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி||

'எப்பொழுது மனிதர் ஆகாயத்தைத் தோலைப்போல்தரிப்பார்கள், அன்றே சிவனையறியாத துன்பங்கள் நீங்கும்' என்று பிரத்தியகாத்ம சிவஞானத்தையே விதந்து கூறியது. ஆதலாற்றான் இந்தஞானம் வேதாந்தத்துள்ளதென்று இறுதியில் சொல்லப்பட்டதெவ்வியது. இவ்வசனத்துக்கப்புறம் இத்தகைய பிரமவித்தையைச் சுவேதாசுவதரரென்ற பிரமநிஷ்டர் சொன்னாரென்று சொல்லி அதன்மேல் உபதேசிக்கப்பட்டவர் அத்தியாசிரமிகளென்றும், இந்த ஞானம் சர்வவேதாந்தங்களிலும் உள்ளதென்றும் சொல்லப்பட்டது.

வேதாந்தே பரமம் குஹ்யம் புராகல்பே ப்ரசோதிதம்

'இஃது வேதாந்தத்தில் முக்கியரகஸ்யம்; முன்சற்பந்தொடங்கிவருவது' என்ற உபசங்காரம் அவ்வுபநிடதத்திற்கண்டலாமென்க. மேலே உதகரித்த கூர்மபுராணத்துள்ள சுசிலோபாக்கியானத்திலும் அப்படியே சுவேதாசுவதரசாகை சர்வவேதசாரமென்றே பெறப்படுதலால் முன்பின் வசனங்களையும் உபபிருங்கணங்களையும் உற்றுநோக்குழி இந்த மந்திரம் பிரத்தியக்பரசிவநிஷ்டை யெனப்படும் அத்துவிதஞானத்தையே குறித்ததன்றி: மற்று வேறுவழியில் இவர்கொண்டவவைதிக காமிகாதியாகமோக்தஞானத்தைக் குறித்ததல்ல. ஆதலாற்றான இம்மந்திரத்தின் பூர்வமந்திரமும்,

நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்|
அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தநமிவாநலம்||

நிஷ்களனும், நிஷ்கிரியனும், சாந்தனும், நிரவத்யனும், நிரஞ்சனனும், அமிர்தனுக்குப் பரமஸேதுவுமான ஈசனை கட்டை கொளுத்திய அக்கினியைப்போ'லென்பது. இங்கு நிஷ்களன், சாந்தன், நிரவத்யன = அமிர்தனுக்குப்பரமஸேதுவென்பது அறியப்படும் வஸ்துவின் விசேடணங்கள். இவை முறையே கலைகள் அற்றவன, சாந்தசுபாவன, குற்றமில்லாதவன், ஜீவனுக்குப் பிராப்யன் என்பனவற்றைக் குறிக்கும். அவை ஆகமிகளுக்கும் ஈசனிடம் சொரூபமாயினும் 'நிஷ்கிரியன் நிரஞ்சனன்' என்ற இருவிசேடணங்கள அகர்த்தா உதாசீனன் என்றுசொல்வதால் அவைசேருவது கடினம். ஆகவே முன்மந்திரத்தில் 'அகர்த்திருதாசீனுத்சுரூபம் அறிந்தவரே விதேககைவல்யம் பெறுவார்' என்று சொல்லப்பட்டதாம். இதில் அறியப்படும்பொருளை நிரஞ்சனம் என்றுகுறித்தலால் அடைபவனும் அங்ஙனம்உபாதிவிலகிஅப்பேற்றைப் பெறுதுபோனால் தாதாத்மயம் (ஐக்கியம்) கூடாதபற்றியே வேறுஉபநிடதத்தும்'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' 'நிர்ஞ்சனனாய் பரமசாம்யத்தைப்பெறுவான்'என்றது. இங்கு நாமரூபமயாவித்யா த்வம்ஸம் சொல்லப்பட்டமையால் நிரஞ்சனனென்ற அடைச்சொல்லுக்கு வேறு பொருள்கூறுவது மிகக்கடினம், நிற்க; மேல் உதகரித்த 'யதா சர்மவத்' என்ற செய்யுளை யாம் சொல்லிய பொருளுளதாகவே உபபிருங்கணங்களும் விரித்தன. அவைகளை விரிவஞ்சிவிடுத்தோம்- இம்மந்திரத்தின் முன்மந்திரம்.

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை||

'எவன் பிரமதேவனை முதலில் சிருஷ்டிக்கிறான்? எவன் அவனுக்கு வேதங்களையும் உபதேசித்தான்' என்று வேதங்கள் பிரமதேவனுக்குபதேசிக்கப்பட்டதாகக் கூறுமுகத்தான் இந்தவுபநிடதம் வேத ஸம்சித்ததத்துவஞானத்தைச் சொல்வதாக ஏற்பட்டது. ஆதலாற்றான் சிவபுராணம் வாயுசங்கிதை நான்காமத்தியாயத்தில்,

ப்ரணம்ய பரமம் ஜ்ஞாநம் காயத்ர்யா ஸஹ ஶம்பவே||

ஈசனை வணங்கி காயத்திரியுடன்பிரமஞானத்தை ஈசனிடம் பெற்றானென்று நிரூபித்து அதே ஞானம் தமக்குப் பிரமதேவனால் உபதேசிக்கப்பட்டதென வாயுபகவான் ரிஷிகளுக்குபதேசித்ததாகச் சொல்லி அந்தப் பிரமவித்தை இச்சுவேதாசுவதரமே என விரிவாய் இவ்வுபநிடதம் உபபிருங்கணஞ் செய்யப்பட்டது. மேலும் அது தொடங்கும்பொழுதே

நாவேதவிந்மநுதே தம் ப்ருஹந்தம்||

'வேதமறியாதாற்கிந்த சாஸ்திரம் உபதேசிக்கக்கூடா'தென்று உபக்கிரமித்தபடியால் இந்த சுவேதாசுவதரவுபநிடதத்திலுள்ள திவ்யஞ்ஞானம் சுத்த வைதிகஅகண்டாத்துவிதமே என்க.

இன்னும் வரும்.